செ.வெ.எண்.294 நாள்.09.07.2017

**காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் கோட்டம், ஆலந்தூர் வட்டம் 28. ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட IDPL மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மற்றும் கண்டோன்மெண்ட் கழக உயர்நிலைப் பள்ளி வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா இஆப அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

***************

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தகுதி வாய்ந்த 18-21 வயது இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிகளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும் பொருட்டு இவ்வாண்டு ஜீலை மாதம் 1-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை சிறப்பு சேர்க்கை முகாம்கள் நடைபெறுகிறது. மேலும் 09.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய தினங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்கள் நடைபெற உத்திரவிடப்பட்டு அதன் படி இன்று அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச் சாவடி நிலைய அலுவலர்களால் வாக்காளர் பெயர்களை சேர்ப்பதற்கான படிவங்கள் பெறப்பட்டன.

இன்று 09.07.2017 காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் கோட்டம் ஆலந்தூர் வட்டம் 28. ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நந்தம்பாக்கம் IDPL மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மற்றும் கண்டோன்மெண்ட் கழக உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா இஆப அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களிடம் இந்திய தேர்தல் ஆணையத்தின் கருப்பொருளுக்கினங்க அதிக அளவில் இளைய வாக்காளர்களை குறிப்பாக 18-21 வயது குழுமத்தை சேர்ந்த வாக்களார்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக் கூடாது என தெரிவித்தார்.

இச்சிறப்பு பணியின் போது இறந்த வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கும் பணியும் நடைபெற உள்ளது. இறப்பு பதிவு செய்யப்பட்ட விவரங்கள் உள்ளாட்சி அலுவலங்களில் இருந்து பெறப்பட்டு அதன் அடிப்படையில் இறந்த வாக்களார்களின் பெயர்கள் வாக்களார் பட்டியலில் இருந்து இச்சிறப்பு பணியின் போது நீக்கப்படும். இந்த வாய்ப்பினை பொது மக்கள் பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ள இளம் வாக்காளர்களை பெயர் சேர்த்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

ஆய்வின் போது தாம்பரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எம். ரவிச்சந்திரன் மற்றும் ஆலந்தூர் வட்டாட்சியர் அவர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.